செய்தி வெளியீடு எண்: 914

**அனல் மின் நிலையங்களில் போதிய அளவு நிலக்கரி கையிருப்பு உள்ளது என தமிழ் நாடு மின்சார வாரியம் அறிவிப்பு.**

அனல் மின் நிலையங்களில் நிலக்கரி கை இருப்பு குறைவாக இருப்பதால் மின் உற்பத்தி முடங்கும் ஆபத்து என்று 26.10.2008 தேதியிட்ட ஒரு காலை நாளேட்டில் _ தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள நான்கு அனல் மின் நிலையங்களுக்கும் தேவையான நிலக்கரி கையிருப்பில் உள்ளது. நிலக்கரி பற்றாக்குறையால், தமிழகத்தில் உள்ள எந்த அனல் மின் நிலையமும் உற்பத்தியை நிறுத்தியதில்லை. மேலும், ஒவ்வொரு அனல் மின்நிலையத்திலும் கையிருப்பில் உள்ள நிலக்கரி அளவு என்று, மேற்படி பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துமே உண்மைக்கு மாறான அளவீடுகளே ஆகும். உதாரணமாக தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் நான்கு நாட்களுக்குத் தேவையான நிலக்கரி கையிருப்பில் உள்ளது. மேலும், தூத்துக்குடி துறைமுகத்தில் இரண்டு கப்பல்களில் சுமார் 75000 மெட்ரிக் டன் நிலக்கரி மேற்படி நிலையத்துக்கு இறக்கிக் கொண்டுள்ளன. இதனைத் தொடர்ந்து அடுத்த இரண்டு அல்லது மூன்று நாட்களில் மேலும் இரண்டு கப்பல்களில் சுமார் 75000 மெட்ரிக் டன் நிலக்கரி வந்து சேரும்.

இதன் மூலம் எந்த வித நெருக்கடியுமின்றி நிலக்கரி வழங்கப்பட்டு வருகின்றது, இது போலவே, மற்ற மூன்று மின் நிலையங்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் நிலக்கரி வழங்கப்பட்டு வருகின்றது. இந்தியாவில் உள்ள 77 அனல் மின் நிலையைங்களுக்கு தேவையான நிலக்கரி கையிருப்பை மத்திய மின்சார ஆணையம் கண்காணித்து பட்டியலிட்டு வருகிறது. அவர்கள் வெளியிடும் பட்டியலில் பொதுவாக அனல் மின் நிலையங்களின் கையிருப்பு 4 நாட்களுக்கும் குறைவாக வைக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. இதை ஒப்பிடும்போது, தமிழக அனல் மின் நிலையங்களில் நிலக்கரி கை இருப்பு கூடுதலாக உள்ளதுடன், தொடர்ந்து கப்பல்கள் மூலம் நிலக்கரி வழங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களில் கடந்த ஐந்து மாத காலத்தில் உற்பத்தி செய்த மின் அளவு, கடந்த ஆண்டு இதே கால கட்டத்துடன் ஒப்பிடும்போது 639 மில்லியன் யூனிட்டுகள் அதிகமாக உள்ளது. எனவே, இதுபோன்ற தவறான செய்திகளை மக்கள் நம்பத் தேவையில்லை.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை.
தலைமைச் செயலகம், சென்னை-9